# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ.எண். 145/2017

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

பி.சா.1. செல்வி. கல்யாணி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 சமாதான மெமோவில் தேதி 29.04.2013 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் வழக்கு தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் இருந்தது. இந்த சமாதான மனுவை நான்தான் நீதிமன்றத்தில் ஆஜராகி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ஆவணத்தை 1, 2 பிரதிவாதிகளின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வா.சா.ஆ.16 ஆவணத்தின் படியான வழக்கினை பற்றியும் அதில் நாங்கள் தாக்கல் செய்த சமாதான மனு மற்றும் தீர்புரை மற்றும் தீர்பாணை குறித்து சொல்லியுள்ளேன். சர்வே எண்கள் 192/1, 192/2 புழல் கிராம சொத்து எனக்கு பூரண உரிமையானது என்று சொல்லியுள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் வாங்கிய சொத்தின் நான்கு எல்லைகள் சர்வே எண் 192/1, 192/2 ன் உட்பட்ட சொத்தின் எல்லைகளாக இருப்பதால் மேற்படி சொத்தைதான் நான் அனுபவித்து வருவதாக பி.சா.ஆ.7 ஆவணத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

பி.சா.ஆ.7 ல் உள்ள சொத்து 4 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்யப்பட்டவுடன் சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ல் ஆவணம் ஏற்பட்ட காலத்தில் நான் சதர்ன் டெலிவிசன் நிறுவனத்தின் இயக்குநர் என்றால் சரியல்ல. 2017 ம் ஆண்டுதான் நான் இயக்குநர் ஆனேன். அதற்கு ஆதரவாக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன்.

2. நான்காம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர் ஆர்.எம்.தமானி எனது உறவினர் இல்லை. பி.சா.ஆ.7 ஆவண தேதியில் எனது குடும்ப உறுப்பினர்கள் யாரும் மேற்படி நிறுவனத்தில் இயக்குநராக இல்லை. பி.சா.ஆ.8 ஆவணத்தை நான்தான் எழுதி கொடுத்தேன். பி.சா.ஆ.8 ல் நான் பி.சா.ஆ.8 ஆவணத்திற்கு முன்பு பட்டா கேட்டு விண்ணப்பித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. நான் பட்டா கேட்டு விண்ணப்பித்ததற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிறுவனத்திற்காக அதிகாரம் பெற்ற முகவர் மனோகர் என்பவர் பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளார். பி.சா.ஆ.7 ஆவணம் ஏற்பட்ட பிறகுதான் சர்வே எண் 192 ல் உட்பிரவுகள் ஏற்பட்டது தெரியவந்தது என்றும் அதன் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளின் சொத்து சர்வே எண்கள் 192/3, 192/4 ல் வருகிறது என்றும் அதற்கான கிழக்கு மற்றும மேற்கு எல்லைகள் மாறியுள்ளது என்றும் அதனால் பிழைத்திருத்தல் பத்திரம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிழைத்திருத்தல் பத்திரம் ஏற்பட்டதற்கு முன்னர் 192/3, 192/4 உட்பிரிவு செய்யப்பட்டது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

பிழைத்திருத்தல் பத்திரத்தில் உள்ள விவரங்கள் வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள சமாதான மனுவில் உள்ள விவரங்களுக்கு முரணாக உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும்.

3. பி.சா.ஆ.9 வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். வருவாய் கோட்டாட்சியர் பட்டா மாறுதல் குறித்து விசாரணை செய்யக்கூடாது என்று தாக்கல் செய்தார். நான் கொடுத்த மனுவின் அடிப்படையிலும் வருவாய் கோட்டாட்சியர் பட்டா மாறுதல குறித்து விசாரணை செய்தார் என்றால் சரிதான். நான் சர்வே எண் 192/3, 192/4 க்கு ஜேம்ஸ் பீட்டர் பெயரிலிருந்த பட்டாவை ரத்து செய்து எனது பெயருக்கு பட்டா வழங்க கேட்டு மனு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான்.

4. 2011 க்கு முன்பு ஜேம்ஸ் பீட்டர் பெயரில் வழக்கு சொத்திற்கான பட்டாவை ரத்து செய்து முன்பு இருந்த நிலையில் வைக்க வேண்டும் என பி.சா.ஆ.10 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.10 ல் பி.சா.ஆ.16 உத்தரவு காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 ல் வாதி சர்வே எண் 192/3, 192/4 ல் உள்ள சொத்துக்களை 2011 க்கு முன்பே கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரங்கள் பற்றி 2014 ம் ஆண்டு பிரதிவாதிகளுக்கு தெரியும். ஜேம்ஸ் பீட்டர் கிரையம் கொடுத்த ஆவணங்களை பிரதிவாதிகள் வாங்கி பார்த்தார்கள். அசல் வழக்கு எண் 49/2006 தேதியில் ஜேம்ஸ் பீட்டர் மற்றும் குடும்பத்தினர் சர்வே எண் 192/3, 192/4 சொத்திற்கு தாங்கள் உரிமையாளர்கள் என கோரும் விவரம்

எங்களுக்கு தெரிய வந்தது. ஜேம்ஸ் பீட்டர் எழுதி கொடுத்த கிரையப்பத்திரங்கள் செல்லாது என்றும் சொத்தில் உள்ள உரிமை விளம்புகை கோரியும் வா.சா.ஆ.16 ல் ஏற்பட்ட சமாதான தீர்பாணை செல்லாது என்று தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு தவிர நான் தாக்கல் செய்த வேறு வழக்கு நிலுவையில் உள்ளதா என்று எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.16 ல் ஏற்பட்ட தீர்பாணையை திரும்ப பெறக் கோரி பி.சா.ஆ.12 ன் உத்தரவின் அடிப்டையிலான மனுவை நான்தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.12 ல் பிறப்பிக்கப்ட்ட சமாதான தீர்பாணை ரத்து செய்யபட்டு வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. அந்த உத்தரவிற்கு எதிராக வாதி வகையராக்கள் உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

5. பி.சா.ஆ.12 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பி.சா.ஆ.15 ல் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். சமாதான குறிப்பாணையில் உள்ளபடி இருதரப்பினர்களும் நடந்துக்கொண்டதால் பி.சா.ஆ.12 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.16 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு பரிசீலனை செய்ய நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். விளக்கம் கேட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து நான் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனு சமாதான குறிப்பாணை என்பதாலும் சமாதான தீர்பாணை இல்லை என்பதாலும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் உத்தரவில் அவ்வாறு குறிப்பிடவில்லை.

6. அசல் வழக்கு எண் 49/2006 ல் 17.06.2013 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் உள்ள காரணங்களினால் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தலையிடவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. இந்த வழக்கை வாதி பிழைத்திருத்தல் பத்திரத்தை ரத்து செய்ய கேட்டு தாக்கல் செய்தார். இந்த வழக்கை ரத்து செய்ய கேட்டு நான் மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து நான் சீராய்வு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு பி.சா.ஆ.19 உத்தரவுப்படி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதற்காக தாக்கல் செய்தேன் என்று என்னால் தற்போது கூற முடியாது. அதை எதிர்த்து வாதி வகையராக்கள் வா.சா.ஆ.10 ல் மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.19 ல் உயர் நீதிமன்ற உத்தரவில் வாதியின் பெயரில் அசல் வழக்கு எண் 49/2006 ல் பிறப்பிக்கப்பட்ட சமாதான குறிப்பு மற்றும் தீர்பாணை மோசடியாக பெறப்பட்டதா என்ற வினாவை இந்த வழக்கில் தீர்மாணிக்க வேண்டும் என நான் எதிர் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பி.சா.ஆ.19 ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ன் கீழ் பி.சா.ஆ.19 ன் உத்தரவினை மறு சீராய்வு செய்ய கோரி மனு தாக்கல் செய்து நான் வழக்கு நடத்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.10 உத்தரவில் அசல் வழக்கு எண் 49/2006 வழக்கை குறித்தோ அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பற்றியோ அது மோசடியாக பெறப்பட்டதா என்பது குறித்து இந்த வழக்கில் தீர்மாணிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அசல் வழக்கு எண் 49/2006 குறித்தோ அல்லது வாதி தரப்பு சான்று ஆவணம் 16 ன் கீழ் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்பாணையின் செல்லும் தன்மை குறித்து இந்த வழக்கில் கட்சி செய்ய முடியாது என்றால் சரியல்ல.

**வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.